**<u>தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்</u>**

செய்தி வெளியீட்டு எண்:**163/2025** நாள்: **24.11.2025**

**<u>செய்திக் குறிப்பு</u>**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்:11/2025, நாள் 15.07.2025 மற்றும் பிற்சேர்க்கை எண்.11A/2025, நாள் 18.11.2025 -ன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு அறிவிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளில் (தொகுதி II மற்றும் IIA பணிகள்) அடங்கியுள்ள பதவிகளுக்கான முதல் நிலைத் தேர்வு ஒளிக்குறி உணரி வகைத் தேர்வு 28.09.2025 மு.ப. தேதியில் நடைபெற்றது.

மேலும் தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்கள், Live Stock Inspector பணி தொடர்பாக "HSC நிலையில் உயிரியல் / தாவரவியல் / விலங்கியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் ஒன்றை நீங்கள் படித்திருக்கிறீர்களா?" என்ற பத்தியில் உள்ள 'Yes/No' என்பதை தவறாமல் தேர்வு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இப்பொருள் குறித்து விவரம் தேர்வர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் தெரிவிக்கப்பட்டது. குறுஞ்செய்தி சென்றடையாத தேர்வர்களுக்கு மின்னஞ்சல் (E-Mail) மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தேர்வாணையத்தின் இணையதளமான http://www.tnpsc.gov.inல் OTR Re-open செய்யப்பட்டுள்ளது. OTR 22.11.2025 முதல் 25.11.2025, 11.59 pm வரை (அதாவது 4 நாட்கள்) திறக்கப்படும். எனவே தங்களது விவரங்களை 25.11.2025 இரவு 11.59 மணி வரை பதிவேற்றம் செய்துகொள்ளவும்.

அ. சண்முக சுந்தரம், I.A.S.,

தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்